DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரசேகர் | Village | பாபனப்பள்ளி |
| Father's Name | வெங்கடசாமி | Taluk | வாணியம்பாடி |
| Age | 87 | Calling | தலைமையாசிரியர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **26.03.2026**

**<u>O.S. No. 100/2003</u>** **<u>வா.சா.3</u>** **<u>12.44 PM – 01.10 PM</u>**

**<u>முதல் விசாரணை –</u>**

1. பிரதிவாதியின் தந்தை ஜேம்ஸ்செல்வதாஸ் தெரியும். அவர் திரு.வி.க நடுநிலைப்பள்ளி நடத்தி வந்தார். அவர் ஒரு அறக்கட்டளை நடத்திவந்தார். அதன் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. 24.11.1965 –ல் நான் ஆசிரியல் பணியில் சேர்ந்தேன், பின்பு 01.07.1967 தலைமையாசிரியராக பணி உயர்வு பெற்று 01.07.1997–லில் ஓய்வு பெற்றேன். நான் பணியில் இருந்த காலக்கட்டத்தில் ஜேம்ஸ் செல்வதாஸ் தான் நிர்வாகம் செய்து வந்தார்.

2. நான் பணி ஓய்வு பெற்ற காலத்தில் யார் நிர்வாகத்தில் இருந்தார் என்று எனக்கு தெரியவில்லை, மீண்டும் சாட்சியிடம் கேள்வியை கேட்டபோது ஜேம்ஸ்செல்வதாஸ் இறந்துவிட்டார் என்றும், பள்ளியின் நிர்வாகம் உதவி கல்வி அலுவலர் கட்டுப்பாட்டில் இருந்தது என கூறுகிறார்.

3. நான் பணி செய்த போது ஜேம்ஸ்செல்வதாஸின் தனிப்பட்ட நிர்வாகத்தில் தான் இருந்தார். நான் ஓய்வு பெறும் போது 350 மாணவர்கள் மற்றும் 19 ஆசிரியர்கள் இருந்தார்கள். ஜேம்ஸ்செல்வதாஸ் என்பவருக்கு எத்தனை பிள்ளைகள் யார் யார் என்று ஞாபகம் இல்லை. நான் பணி செய்த பள்ளி அரசாங்க உதவி பெறும் பள்ளி தான். எந்த நோக்கத்திற்காக மற்றும் பிரிவினரின் நலனுக்காக தொடங்கப்பட்ட பள்ளி என்பது குறித்து எனக்கு தெரியாது. நான் பணி செய்த வரை முதலில் வாணியம்பாடியில் Deputy Inspector of Schools மேற்பார்வையில் இருந்தது பின்பு நாட்றம்பள்ளி ஏ.இ.ஓ மேற்பார்வைக்கு வந்தது.

4. சாட்யிடம் பி.வா.சா.ஆ.4 காண்பிக்கப்படுகிறது. அது ஜேம்ஸ்செல்வதாஸ் எழுதிய உயில் ஆவணம். அதில் முதல் சாட்சியாக என்னுடைய கையொப்பம் தான் இருக்கிறது. 2வது சாட்சி கையொப்பம் இட்டார் குமரநாதன் அவர் தற்போது உயிருடன் இல்லை. உயில் எழுதிவைத்த நபர் தற்போது உயிருடன் இல்லை. என்ன காரணங்களுக்காக இந்த உயில் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னை பணியில் அமர்த்திய போது ஜேம்ஸ்செல்வதாஸ் தான் தாளலாராக நிர்வாகத்தில் இருந்தார்.

<u>குறுக்கு விசாரணை –</u>

1. ஜேம்ஸ் நல்லப்பா என்பவரை நீக்குவதற்காக 16.12.2001 ல் தீர்மானம் போடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. 2001 ஆண்டிற்கு பிறகு பள்ளியின் உடைய நிர்வாகம் யார் நடத்தி வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான் நான் முன்னரே ஓய்வு பெற்று விட்டேன். சின்னப்பிள்ளை மகன் மகேந்திரன் என்பவர் தான் தற்போது பள்ளியின் நிர்வாகத்தை நடத்தி வருகிறார் என்று சொன்னால் நடத்தி வருகிறார் என்று தெரியும்.

2. இந்த வழக்கில் யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் என்ன நிவாரணம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்ததாக என்னுடைய முதல் விசாரணையில் தெரிவித்துள்ளேன் அந்த ஆவணத்தில் என்னென்ன விவரங்கள் இருந்தது என எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். மேற்படி உயிலின் அசல் ஆவணத்தை பார்த்தால்தான் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்ற விவரம் தெரிய வரும் என்றால் ஆமாம்.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.